பக்கங்கள்: எட்டு

நல்லூர் இன நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 08 திங்கட்கிழமை (21-04-1997) - UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 144

## இனப்பிரச்சினைத் தீர்வில்

# அரசு-ஐ.தே.க. உடன்பாடு ஏற்பட்டும் இதுவரை ஏதும் நடைபெறவில்லை!

## கூட்டணித் தலைவர் கவலை

கொழும்பு, ஏப்ரல் 21

''இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவும் எதிர்க் கட்சித் தலைவர் ரணிலும் சமீபத்தில் உடன்பாடு ஒன்றைக் கண்டிருந்தனர். எனினும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக இவர்கள் இதுவரை நடவடிக்கை ஏதாவது எடுத்ததாகத் தெரியவில்லை.''

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கவலை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும், ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடு அர்த்தமுள்ளதாக அமைய வேண்டுமானால் அரசு புலிகளுடன் உடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக தமிழர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் ஒத்துழைப்பின்றி சமாதானம் ஏற்பட முடியாது

### பிரதமர் ஸ்ரீமாவோ தெரிவிப்பு

''இந்த ஆண்டில் சமாதானம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனால் தான் சமாதானம் கொண்டு வரப்படவேண்டும். அவரின் ஒத்துழைப்பு இல்லாமல் சமாதானம் ஏற்பட முடியாது என நான் நினைக்கிறேன்.''

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனது 81 ஆவது பிறந்த தினமான கடந்த வியாழக்கிழமை தனியார் வானொலி, தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார் என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-3-150)

# குஜ்ரால் பிரதமராக இன்று பதவி ஏற்கிறார்

புதுடில்லி, ஏப். 21

இந்தியாவின் 12 ஆவது பிரதமராக இந்திரகுமார் குஜ்ரால் இன்று காலை 10 மணிக்கு பதவி ஏற்கின்றார்.

குஜ்ராலை பிரதமராகப் பதவி ஏற்குமாறு இந்திய குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா நேற்றிரவு அழைப்பு விடுத்தார்.

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போன்று நேற்று பதவி ஏற்பு இடம் பெறவில்லை.

இதற்கு முன்னதாக ஐக்கிய முன்னணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் கையெழுத்திட்ட உரிமை கோரும் கடிதம் சங்கர் தயாள் சர்மாவிடம் அளிக்கப்பட்டது.

இந்தக் கடிதத்தை கையளித்த பின்னர் செய்தியாள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மூப்பனாரை குஜ்ரால் சந்தித்துப் பேசினார்

### முடிவை மாற்றுமாறு வற்புறுத்து

தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனாரை நேற்று குஜ்ரால் சந்தித்துப் பேசினார்.

புதிய அரசில் சேரப் போவதில்லை என்ற முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு குஜ்ரால் கேட்டுக் கொண்டார்.

அதே நேரம் சந்திரபாபு நாயுடுவும் மூப்பனாரைச் சந்தித்துப் பேசினார்.

அதே சமயம் ஐக்கிய முன்னணி அரசில் தி. மு. க. பங்கேற்கும் என்று அமைச்சர் முரசொலி மாறன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி குஜ்ராலைச் சந்தித்து தமது வாழ்த்தைத் தெரிவித்தார்.

''குஜ்ரால் முன்னைய காங்கிரஸ் காரரர். அவர் காங்கிரஸின் உணர்வுக்கு மதிப்பளிப்பார்'' என்று காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி தெரிவித்தார்.

அரசியல் நெருக்கடி தணிந்து நாடு மூன்று வாரங்களுக்கு பின்னர் நிம்மதிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தீக்குளிப்பு முயற்சி

சென்னை, ஏப். 21

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனார் பிரதமராகும் வாய்ப்பை இழந்ததைக் கேட்டு, தமிழ் மாநிலக் காங்கிரஸ் தொண்டர் ஒருவர் கும்பகோணம் அருகே தீக்குளித்து தற்கொலை செய்ய முயற்சித்தார்.

அவர் தீக்காயங்களுடன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப ஸ்ரீமானியும் அரசுக்குத் தொந்தரவு கொடுக்கிறது என்று முடிவு எடுத்திட்டா போல..!

## விமான பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணத்துக்கும், கொழும்புக்கும் இடையிலான விமானச்சேவை குறித்து சில அறிவுறுத்தல்களை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்று விடுத்தது.

விமானத்தில் பயணம் செய்ய பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 344 வரை அனுமதி கிடைத்துள்ளதாகவும் —

இப்பட்டியல்களில் உள்ளவர்கள் தமது பயணத்தை உறுதிசெய்து கொள்ளுமாறும் — கேட்கப்பட்டுள்ளது.

பட்டியல் இலக்கம் 279, 280, 281 ஆகியன எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் ரத்தாவதாகவும் தெரிவிக்கப்பட்டது (இ-3)

## அரசின் மே தினக் கூட்டத்தை ஸ்ரீமானி கட்சி பகிஷ்கரிக்கும்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மே தினக் கூட்டத்தை பகிஷ்கரிக்கப்போவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவியும், அமைச்சருமான ஸ்ரீமானி அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் அமுல் செய்யப்படும் சமுர்த்தித்திட்டத்தில் இடம் பெற்ற நியமனங்களில் தமது கட்சிக்கு இழைக்கப்பட்ட அநீதியை கண்டிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களின் போதும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரம் நடத்த ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி தவறி இருந்தது தெரிந்ததே. (இ-3)

## எஞ்சிய அன்ரனோவ் மயிரிழையில் தப்பியது!

கொழும்பு, ஏப். 21

''விமானப்படையிடம் எஞ்சியுள்ள ஒரேயொரு 'அன்ரனோவ் 32' ரக விமானமும் கடந்த வாரம் விபத்துக்குள்ளாவதில் இருந்து மயிரிழையில் தப்பிப் பிழைத்தது.''

இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து படையினரை ஏற்றிக்கொண்டு இந்த விமானம் ஓடுபாதையில் ஓடி உயரப் பறக்க முற்பட்டபோது விமானத்தின் இயந்திரங்களில் ஒன்று பழுதானதாகவும்—

விமானத்தை ஓட்டிய உக்ரைன் நாட்டு விமானி விமானத்தை சாதுரியமாக தரை இறக்கியதால் விபத்து தவிர்க்கப்பட்டது என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## மத்திய கல்லூரி மைதானத்தில் புத்தாண்டு விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 21

பொது மக்களுக்கான தமிழ் — சிங்கள புத்தாண்டு விழா நிகழ்ச்சிகள் நாளை காலை 9 மணி முதல் பிற்பகல் 1. 30 மணி வரை யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் கோலாகலமாக நடைபெறும் என யாழ். நகர இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

லொட்டரி சீட்டிழுப்பு, அழகுராணிப் போட்டி, கிறீஸ் கம்பம் ஏறுதல், தலையணைச் சண்டை, சங்கீதக் கதிரை, சிரிப்புப் போட்டி, அழுகைப் போட்டி, 12 வய

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. க. சத்தியதாசனின்
தாயாரான

### திருமதி சின்னமணி கந்தையா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.**

**யா. சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்**

சண்டிலிப்பாய். (46468)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மாணிக்கம் அம்பலவாணர்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் அம்பலவாணர் 04 - 04 - 1997 அன்று மதியாமடுவில் காலமானார்.

இவர் அம்பலவாணரின் அன்பு மனைவியும், பகீரதன் (ஆசிரியர், புளியங்குளம் மகாவித்தியாலயம்), முரளீதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி அன்னப்பிள்ளை சின்னத்துரை, திருமதி கமலம் சபாரத்தினம் (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி), காலஞ்சென்ற ஆ. குணரத்தினம் (உதவிப் பதிவாளர் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மதியாமடுவில் 05 – 04 – 97 அன்று நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

சாவகச்சேரி, சி/ (542)

## முத்துத்தம்பி அரியநாயகம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், சரசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி அரியநாயகம் 20 – 04 -1997 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், இராசம்மாவின் அன்புக்கணவரும், பாலச்சந்திரன் (பாலா மில் உரிமையாளர் — மானிப்பாய்), ஜெயச்சந்திரன் (வீடியோ ஜெயம் — சாவகச்சேரி), ரவிச்சந்திரன் (துர்க்கா மில் — கல்வயல்), சுமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜனி, சிலோஜனா ஆகியோரின் மாமனாரும், சபாநாயகம், மனநாயகம், ரூபி, மணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20 - 04 - 97 ஞாயிற்றுக்கிழமை அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரசாலை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**அ. பாலச்சந்திரன் (மகன்)**

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (46458)

## மயில்வாகனம் வாரித்தம்பி

**(ஓய்வு பெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர்)**

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மயில்வாகனம் வாரித்தம்பி 19- 04- 97 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திருமதி ஞானகலாவல்லியின் (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை — மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், இராசம்மா, குஞ்சுத்தம்பி (ஜேர்மனி), கோபாலகிருஷ்ணன் (துணுக்காய் பல. நோ. கூ. சங்கம்), கைலாயபதி (நீர்ப்பாசனத் திணைக்களம் — யாழ்.) தங்கராணி, கணேசமூர்த்தி (ஜேர்மனி), கலாவதி ஆகியோரின் மாமனாரும், திருமதி சித்திரா கோபாலகிருஷ்ணன், சத்தியநாதன் (கச்சாய்), திருமதி ராஜேஸ்வரி மகேஸ்வரனின் தந்தையும், காலஞ்சென்ற வைகுந்தநாதன், காலஞ்சென்ற ஸ்ரீ ரங்கநாதன் மற்றும் அருணகிரிநாதன் (கனடா), காலஞ்சென்ற சோமகலாவல்லி, சுந்தரகலாவல்லி, கருணைகலாவல்லி (கனடா), சற்குருநாதன் ஆகியோரின் மைத்துனரும், குகநேசன், சதீஸ், நிசாந்தன், தர்சிகா, சுகந்தன், அஸ்வினி, நிராஞ்சலி, சுதாகர், யாழினி, நந்தகோபன், கோபிகா, சர்வேசன் ஆகியோரின் தாத்தாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 20- 04- 97 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் அல்லாரை, கொற்புலவு மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி ஞானம் வாரித்தம்பி
(மனைவி)**

''பரணி,''
மீசாலை வடக்கு,
கொடிகாமம். (46465)

# ஆஸ்பத்திரியின் 3 முக்கிய பிரிவுகள் ஊழியர் பற்றாக் குறையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ். போதனாவைத்திய சாலையின் முக்கிய பிரிவுகளான ஆய்வுகூடம், எக்ஸ்-றே, இயன் மருத்துவ நிலையம் போன்ற பகுதிகளில், தற்போது நிலவிவரும் தொழில் நுட்பவியலாளர் பற்றாக்குறையும், விடுமுறை தினங்களில் கடமையாற்றுவதற்கான மேலதிக சம்பளக் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருப்பவை போன்ற நடவடிக்கைகளும், நோயாளருக்கான வைத்திய சேவையில் பெரும் பாதிப்பை உருவாக்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

20 தொழில்நுட்பவியலாளர்கள் பணிபுரிந்து வந்த ஆய்வுகூடப் பிரிவில் தற்போது 11 பேர் மாத்திரமே கடமையாற்றுகின்றனர். இதிலும் 8பேர் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்பவர்கள்: 3 பேரே நிரந்தர வேலையாளர்கள்.

14 பேருடன் இயங்கி வந்த எக்ஸ்-றே பிரிவு தற்போது மூவருடன் மாத்திரம் இயங்குகிறது. அதிலும் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்பவர்.

14 பேருடன் செயற்பட்டு வந்த இயன் மருத்துவப் பிரிவு (D, P. M) இரண்டு பேருடன் மாத்திரமே செயற்படுகிறது. அவர்கள் இருவரும் ஒப்பந்த அடிப்படையிலேயே வேலை செய்கின்றனர்.

நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வரும் இக்கால வேளையில் இப்பற்றாக்குறை இப் பிரிவுகளின் செயற்பாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆய்வுகூடத்தில் பல நோயாளர்களின் பல்வேறு பரிசோதனைகள் தாமதமாகவும், ஒத்திப் போடப்பட்டுமே செய்யப்படுகின்றது.

இதேவேளை 'எக்ஸ்-றே' பிரிவிலும் இந்நிலையே உருவாகியுள்ளது. யாழ். வைத்தியசாலை நோயாளர்களுக்கு மாத்திரமன்றி, சயரோக வைத்தியசாலை, மற்றும் பருத்தித்துறை வைத்தியசாலை ஆகியவற்றைச் சேர்ந்த நோயாளர்க்கான 'எக்ஸ்-றே'களும் தற்போது இங்கேயே எடுக்கப்பட்டுவருவதால் வேலைப்பளு மிகவும் அதிகரித்துள்ளது.

குறிப்பிட்ட வேலைகளை முடிப்பதில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டுவருகின்றன.

இயன் மருத்துவப் பிரிவிலும் ஒழுங்காகச் சிகிச்சை அளிக்க முடியாதிருப்பதாகவும், பல நோயாளிகள் திருப்பி அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ–15]

## சைவ சித்தாந்த பண்டிதர் தேர்வு

சைவ பரிபாலன சபை நடத்தும் சைவ சித்தாந்த பண்டிதர் தேர்வு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் மே மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான பிரவேசப் படிவங்கள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவ பரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் திரு. வ. கந்தசாமி தெரிவித்தார்.

## காரைநகரில் நீர் விநியோகம்

திருநெல்வேலி, ஏப்.21

காரைநகரில் கிராமிய நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக நிதி உதவியுடன் நீர் விநியோகத் திட்டத்தைப் புனரமைப்பு செய்து விஸ்தரிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் வடபிராந்திய அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இத்தகவலை பிராந்திய முகாமையாளர் திரு. ஜி. ஜேசுதாசன் தெரிவித்தார். (ஐ-135)

# யுனெஸ்கோ நிறுவனம் மாணவரிடையேபோட்டி

ஐக்கிய நாடுகள் கல்வி கலாசார விஞ்ஞான நிறுவனம் மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, சித்திரப் போட்டி என்பவற்றை யாழ்.கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தவுள்ளது.

இப் போட்டிகள் யாவும் பாடசாலைமட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம் என்பவற்றில் நடத்தப்படும்.

பேச்சுப் போட்டியை மே மாதத்துக்கு முன்பும், கட்டுரைப் போட்டியை ஜூலை மாதத்துக்கு முன்பும், சித்திரப் போட்டியை செப்ரெம்பர் மாதத்துக்கு முன்பும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரையுள்ள மாணவர்கள் ஆரம்பபிரிவிலும்—

ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 8 வரையுள்ள மாணவர்கள் கனிஷ்டபி ரிவிலும்—

ஆண்டு 9 தொடக்கம் ஆண்டு 11 வரையுள்ள மாணவர்கள் கனிஷ்ட இடைநிலைப் பிரிவிலும்—

ஆண்டு 12 தொடக்கம் ஆண்டு 13 வரையுள்ள மாணவர்கள் மேற்பிரிவிலும் சேர்த்துக்கொள்ளப்படுவர்—

பாடசாலைமட்டப் போட்டிகள் மே மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னரும், கோட்டமட்டப் போட்டிகள் மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும் நிறைவுபெற வேண்டுமென யாழ். வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார்.(இ-118)

உ

தாவடி
அருள்மிகு

## ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள்

தேவஸ்தான

## இரதோற்சவ விஞ்ஞாபனம்

மேற்படி ஆலயத்தில் இன்று (21-04- 97) திங்கட்கிழமை காலை 9. 00 மணிக்கு வசந்தமண்டப பூசையும், 10. 30 மணிக்கு இரதோற்சவமும் நடைபெறும்.

(22- 04- 97) செவ்வாய்க்கிழமை காலை 10. 00 மணிக்கு வசந்தமண்டப பூசையும் 11. 00 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். பக்த அடியார்கள் வருகை தந்து எம் பெருமாட்டியின் அருளைப் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**ஆலய முகாமையாளர்.**

(சி/ 545)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: **10-04-1940**



அம்பாள் அடியில்: **15-04-1995**

சண்முகரத்தினசர்மா
நாகேந்திரசர்மா
**(கண்ணன் ஐயா)**
திதி: 22 - 04 - 1997

அறிவின் ஒளியாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் விளக்கமாய்
பாரினில் வாழ்ந்த நீவிர்!
போதும் இவ்வுலகம் என்றெண்ணி
மறுபயணம் சென்றீரோ?

உங்கள் ஆத்மசாந்திக்காக வேண்டி நிற்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

பத்திரகாளி கோயில்,
தாவடி. (சி/544)

## கண்ணீர் அஞ்சலி

### சின்னமணி (தங்கம்) கந்தையா

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சண்முகவடிவு தில்லைமணியின்**
அன்புத் தாயார்

சின்னமணி கந்தையா அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்,
தெல்லிப்பழை.**

(46467)

Digitized By Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் போக்குவரத்து உட்பட பல நெருக்கடிகளை தீர்க்கத் திட்டம்

## வீதி ஒழுங்குகள் புதிதாக நடைமுறைக்கு வரும்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ். நகரப்பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்க சில திட்டங்கள் அமுல்செய்யப்பட உள்ளன.

யாழ். மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் மற்றும் மாநகரசபை அதிகாரிகளுடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க. சிவதாசன், எஸ். தங்கவேல், ஈ. பி. டி. பி. யாழ். அரசியல் பொறுப்பாளர் ஜெகன் ஆகியோர் நடத்திய பேச்சுக்களின் போது இத்திட்டம் குறித்து ஆராயப்பட்டது.

யாழ். கஸ்தூரியார் வீதியை ஒருவழிப் பாதையாக்குவது தொடர்பாகவும் —

ஸ்ரான்லி வீதியில் இலங்கை வங்கிக்கிளைக்கு அருகில் — பஸ் நிலையப் பகுதி நோக்கிச் செல்லும்— வீதியைத் திறப்பது தொடர்பாகவும் —

நகரில் பாதுகாப்புப்படையினரால் மூடப்பட்டுள்ள சில வீதிகளை பொதுமக்கள் பாவனைக்காக திறப்பது தொடர்பாகவும் — இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இக் கூட்டத்தில் ஆராயப்பட்ட ஏனைய சில விடயங்கள் வருமாறு:-

★ ஆஸ்பத்திரிக்கு முன்பாக வீதியில் அமைந்துள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றுதல்.

★ ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வாகன தரிப்பிடத்தையும் வேறு இடத்தில் அமைத்தல்.

★ தற்சமயம் குருநகரில் உள்ள கொல்களத்தை கோட்டைக்கு அருகில் முன்பிருந்த இடத்துக்கு மாற்றுதல்.

★ நகரில் உள்ள கழிவுகளை அகற்ற கழிவகற்றும் வாகனங்களை கொழும்பில் இருந்து பெறுதல்.

★ யாழ். மத்திய பஸ் நிலையத்தில் மலசல கூடத்தை தற்காலிகமாக அமைத்தல்.

★ நகரில் உள்ள கடைக் கட்டடங்கள் தொடர்பான உரிமை அத்துமீறல்களை நிறுத்த நடவடிக்கை எடுத்தல். 95 ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டடங்களை உரிமையாகக் கொண்டிருந்தவர்களுக்கு அவற்றை உரிமையாக்குதல்.

★ குருநகர், பாசையூர் பகுதிகளில் சேதமடைந்துள்ள மலசல கூடங்களைத் திருத்துதல், மலசல கூடங்களை புனரமைக்கும் பணிகளை யுனிசெவ் அமைப்பின் உதவியுடன் மேற்கொள்ளல்.

(ஐ-3)

# விமானம் மூலம் கோழிக் குஞ்சு எடுத்து வருவது இடை நிறுத்தம்

## வெப்பத்தால் உயிரிழக்கின்றன

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ். மாவட்டத்துக்கு கொழும்பில் இருந்து கோழிக்குஞ்சுகளை எடுத்து வந்து விநியோகிக்கும் பணி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

தற்சமயம் வெப்பநிலை கூடியுள்ளதால் விமான மூலம் எடுத்து வரப்படும் கோழிக்குஞ்சுகள் பெருமளவில் இறப்பதையடுத்து இந்தப் பணி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள வடக்கு உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி ஜி. சிவபாலசுந்தரம் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து காலையில் வரும் விமானங்களில் கோழிக்குஞ்சுகளை எடுத்து வருவது தொடர்பாகப் பேச்சுக்கள் நடைபெறுவதாகவும்—

அடுத்த மாதத்தில் இப்பணி மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என்றும் — அவர் தெரிவித்தார். (ஐ-3)

# யாழ். மரக்கறிகள் கொழும்பில் இலாபகர விலைக்கு விற்பனை

## தொடர்ந்து அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்ட மரக்கறி வகைகள் இலாபகரமான விலைகளுக்கு அங்கு விற்பனையானதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் இருந்து 30 மெற்றிக் தொன் மரக்கறி மற்றும் வாழைக் குலைகள் ''மாஹோ'' கப்பல் மூலம் பரீட்சார்த்தமாக அண்மையில் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தன.

பழுதடையாத நிலையில் கொழும்பு சென்றடைந்த அவை கொழும்புச் சந்தையில் நியாயமான விலைக்கு விற்பனையாகின எனச் செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கப்பல் மூலம் தொடர்ந்து மரக்கறி வகைகளை கொழும்புக்கு அனுப்ப செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஐ-3)

### வன்னிப் பிரதேசத்தில்

# செஞ்சிலுவை மருத்துவ சேவையில் பனடோல் மட்டுமே கிடைக்கிறது

யாழ்ப்பாணம், ஏப். 21

வன்னி மாவட்டத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடத்தும் நடமாடும் வைத்திய சேவையில் 'பனடோல்' போன்ற அடிப்படை மருந்து வகைகளே மக்களுக்கு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு 6 நடமாடும் வைத்திய சேவைகளை வன்னிப் பகுதியில் நடத்தி வருகின்றது.

நோய் காணும் பகுதிகளுக்கு இந்தச் சேவை உடனுக்குடன் அளிக்கப்படுகிறது.

ஆனால் இந்தச் சேவையில் நோய் காணும் மக்களுக்கு 'பனடோல்' போன்ற அடிப்படை மருந்து வகைகள் மட்டுமே வழங்கப்படுகின்றன.

வன்னிக்கு மருந்து வகைகள் எடுத்துச் செல்வதற்கு உள்ள தடைகாரணமாக சகல மருந்து வகைகளையும் அந்த அமைப்பினால் அங்கு எடுத்துச் செல்ல முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# திக்கம் வடிசாலையில் உள்ள பனஞ்சாராயம் விரைவில் சந்தைக்கு

திருநெல்வேலி, ஏப். 21

திக்கம் வடிசாலையில் தற்போது 75 ஆயிரம் போத்தல் பனஞ் சாராயம் கையிருப்பில் உள்ளது.

இதனை பரிசோதித்த அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் தரமான சாராயம் என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளதை அடுத்து இதனை சந்தைப்படுத்துவதற்கான அனுமதியை கொழும்பிலுள்ள மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் வழங்கியுள்ளார்.

யாழ். மாவட்ட மதுவரி திணைக்கள உதவி மதுவரி ஆணையாளர் திரு. வீரவாகு துரைராஜா இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த சாராயத்தை சந்தைப்படுத்துவதற்கு ரூபா 50 ஆயிரம் லைசென்ஸ் அனுமதிக் கட்டணமும், போத்தலில் அடைப்பதற்கு மதுவரி தீர்வையாக 67 இலட்சத்து 46 ஆயிரத்து 364 ரூபா 20 சதமும் திக்கம் வடிசாலை முகாமையாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

# பாராட்டு விழா

திருநெல்வேலி, ஏப். 21

வண்ணை. சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில் கடந்த 22 வருடங்களாக புராண படன விரிவுரை, சமய விரிவுரை என்பவற்றை ஆற்றி வந்த திரு. முத்துத்தம்பி தியாகராசாவை கௌரவித்து நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆலய தர்ம பரிகாலன சபை பாராட்டு விழா ஒன்றை நடத்தவுள்ளது.

(ஐ-135)

# மாணவருக்கு உதவிகள்

குருநகர், ஏப். 21

வன்னியில் இருந்து மீள வந்து யாழ்ப்பாணத்தில் தமது கல்வியைத் தொடரும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கு உதவிகளை வழங்க யாழ். கத்தோலிக்க இலக்கிய வட்டம் பல நடவடிக்கைகளை எடுத்துவருவதாக அதன் செயலாளர் தெரிவித்தார். (ஐ-51)

# பாலர் பாடசாலை புனரமைப்பு

குருநகர், ஏப். 21

இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த குருநகர் சென். றோக்ஸ் சன சமூக நிலையத்தின் பாலர் பாடசாலையும், சென். றோக்ஸ் விளையாட்டு மைதானமும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஜெகனின் பணிப்பின் பேரில் குருநகர்ப் பொறுப்பாளர் [illegible] இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (ஐ-51)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஏப். 21

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான இந்து ஆலயங்களில் நாளை செவ்வாய்க்கிழமை சித்திரா பூரணை விசேட பூசை வழியாடுகள் இடம் பெறவுள்ளன.

சித்திரைச் சித்திரை, சித்திர குப்த்த விரதம், சித்திரைக் கஞ்சி வழங்கல், பூரணை தின திருவிளக்கு, சுமங்கலி பூசை, சித்திரைக் கதைப்படிப்பு ஆகிய நிகழ்வுகளும் நாளை இடம் பெறவுள்ளன.

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர், நல்லூர் சிவன், உரும்பிராய் ஸ்ரீ பார்வதவர்த்தனி, கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள், தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் ஆகிய ஆலயங்களிலும் சித்திரா பௌர்ணமி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

(ஐ-30)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ காமட்சி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோயில்) வருடாந்த இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை சிறப்புற நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளுவார்.

நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், பிற்பகல் 2.30 மணிக்கு திருவிளக்குப் பூசையும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த தேர்த் திருவிழா இன்று காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் புதன் கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

கைதடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா இன்று காலை 9 மணி முதல் இடம்பெறவிருக்கிறது. (ஐ-30)

★ ★ ★

கரணவாய் வடக்கு எள்ளன் குளன் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும் புதன்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

சாவகச்சேரி பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவ தேர் உற்சவம் இன்று காலை இடம்பெறும் நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும். (ஐ-118)

★ ★ ★

சாவச்சேரிசாங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவ தேர் உற்சவம் இன்று காலை 8-30 மணிக்கு நடைபெறும். சித்திரா பௌர்ணமி தினமாக நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

(ஐ-117)

★ ★ ★

வட்டுக்கோட்டை, அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய இரதோற்சவம் இன்று திங்கட்கிழமையும், தீர்த்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளன.

(ஐ-135)

# உணவு முத்திரை பொருள்கள் விநியோகம்

சாவகச்சேரிப் பகுதியில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தோருக்கான உணவு முத்திரையின் 42 ஏ, 42 பி ஆகிய புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க 1 ஆம் 3 ஆம் இலக்க கிளைக் கடைகளிலும் —

மீனவர்களுக்கான 7 ஆம் 8 ஆம் கட்ட புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் 23 ஆம் இலக்க கிளைக்கடையிலும் வழங்கப்படுவதாக சங்கப் பொது முகாமையாளர் சி. சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

(ஐ-118)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

அருள்மிகு

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

தேவஸ்தானம்

திருநெல்வேலி

இராஜ கோபுர அடிக்கல் நாட்டு விழா

காலம்:- 21 - 04 - 97 இன்று

காலை 6 மணி — 7 மணி வரை

பிரசுர அன்பளிப்பு:

தேவி மில்

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (46466)

உ

கொக்குவில்

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

திருப்பணி நிதி

அம்பிகை அடியார்களே!

மேற்படி ஆலயத்தில் புனருத்தாரணப் பணிகள் செய்வதற்காக 04-04-97 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் மிக விரைவில் நடைபெற, திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திருப்பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதியுதவி வழங்குபவர்கள் ஆலய அலுவலகத்தில் நிதியைச் செலுத்துமாறும் அல்லது ஆலய பெயரில் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியில் 3396 என இலக்கம் கொண்ட நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நா. நித்தியானந்தன் — தலைவர்

சு. பரமேஸ்வரன் — செயலாளர்

வே. ம. சுப்பிரமணியம் — பொருளாளர்

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

கோணாவளை ஒழுங்கை, கொக்குவில். (46441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வெட்டி நிமிர்த்திய புதிய பெரல் தகரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு. ஆனந்தகுமார், இல. 11, பிறவுண்வீதி. யாழ்ப்பாணம். (நாவலர் வீதிக்கு அண்மையில்) [46438]

யாழ். கச்சேரிக்கும் கல்விக் கந்தோருக்கும் இடையில் கச்சேரி நல்லூர் வீதியில், 94, ஆம் இலக்க வீடும், வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.V. ஜெயலிங்கநாதன், 126/29, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [46449]

நல்ல நிலையிலுள்ள, வீட்டுத் தளபாடங்களான கட்டில்கள் Ceyesta மெத்தையுடன், அலுமாரி, மேசைகள், Singer தையல் மெசின், பித்தளை சமையல் பாத்திரங்கள், Drawing Room Sets, குளிர்சாதனப்பெட்டி ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குகதாசன் 6/2. புனித அன்னாள் ஆலயவீதி பாண்டியன் தாழ்வு சுண்டுக்குளி. [46447]

### தவறிவிட்டது

பேரம்பலராஜா ஐங்கரன் என்பவரது விசேட அடையாள அட்டை சாவகச்சேரிக்கும், நுணாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பேரம்பலராஜா, சங்கம் வீதி, சங்கத்தானை என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (46450)

சுப்பிரமணியம் பழனிவேற்பிள்ளை ஆகிய எனது அடையாள அட்டை 362041686V யாழ்ப்பாணத்துக்கும் வேலணைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் வசந்தா பார்மசியில் ஒப்படைத்து உதவவும். (46456)

தவராஜா, சுகந்தி ஆகியோருடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் யாழ். மருத்துவமனை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (46452)

மருதலிங்கம் விஜயலட்சுமி என்பவரதுஇல 496802039V தேசிய அடையாள அட்டை பேர்சுடன் நல்லூர் கோயிலுக்கும் செட்டித்தெரு நாவலர்வீதிச் சந்திக்குமிடையில் 18-4-97 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 316, நாவலர்வீதி எனும் முகவரியில் அல்லது பாப்பையா கடையில் தயவு செய்து ஒப்படைக்கவும். (46461)

ஸ்ரெலா இராசதுரை என்பவரது இல. 775023376V தேசிய அடையாள அட்டையும், இல. 091000540 விசேட அடையாள அட்டையும் யாழ். பஸ் நிலையத்துக்கும் நாவற்குழி சந்திக்குமிடையில் பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து எரிக் கணேஷ் (மூக்குக்கண்ணாடி அகம்) 566, ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (46462)

பமிலேஸ்வரி செல்வராசா என்பவரது இல. 735054155V தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஞா. ஜெயராசா, பிரதான வீதி, வட்டுக்கோட்டை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (46453)

### அக்கரைச்சீமையில்

இலங்கை, இங்கிலாந்து நாவல் பரிசளிப்பதற்கு ஏற்றது. மலிவு விலை ரூபா 25/- நாடகம் எழுதுவது எப்படி? ஒரு நாடகமும், 22 கட்டுரைகளும் ரூபா 50/-. எழுதியவர் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை. [46104]

### நூலாலயம்

'நூலகம் அறிவின் தாயகம்', ஈழத்து தமிழக படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள் லிங்க் லெண்டிங் லைபிரறி, Ling Lending Library, சாவகச்சேரி. [45932]

### ஆண்டு - 5 புலமைப்பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் புதிய பரீட்சைத் திட்டத்திற்கு அமைவான விசேட பயிற்சிகள் விற்பனையாகிறது. விலை ரூபா 100/- வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை இல. 04 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (சி/531)

### ஆங்கில வகுப்பு

தனிப்பட்டவர்களுக்கு அல்லது சிறு குழுக்களுக்கு ஆங்கில வகுப்புக்கள் லண்டன் பட்டதாரி ஆசிரியரால் நடத்தப்படுகின்றது. ஆண்டு7-ஆண்டு11: தொடர்பு: 112, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (9537)

### மணப்பெண் தேவை

வயது 48, சுவிசேஷ திருப்பணி செய்பவர். அழகிய, பொருத்தமான, கிறிஸ்தவ (Non-R.c) மணமகளைத் தேடுகிறார். தொடர்பு: திரு. D.T. நைல்ஸ், இல. 12, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [46459]

யாழ். கத்தோலிக்க கௌரவ குடும்பம், 28 வயது நிரம்பிய கொழும்பிலுள்ள தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை, தொழில் பார்ப்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு:- மே/பா, இல. 610,'உதயன்' யாழ்ப்பாணம். (46463)

### தமிழ் தட்டெழுத்து

தமிழ் றெமிங்ரன் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 30-04-97 ஆம் திகதிக்கு முன் அலுவலகத்தில் பார்வையிட்டு மேல் விவரங்களைப் பெற்றுக் கொள்ளவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி/539)

### மணமக்கள் தேவை

சைவ வேளாளர்குலவர்த்தகருக்கு 30 வயதுக்குட்பட்ட அழகான உத்தியோகம் பார்க்கும் செவ்வாய்க் குற்றமற்ற மணப்பெண்ணும், 28 வயது அழகான மணமகளுக்கு உத்தியோகம் அல்லது வியாபாரம் செய்யும் மணமகனும் தேவை. தொடர்பு: மே/பா இல. 608, உதயன் யாழ்ப்பாணம். (46413)

குருபாதம்

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மனையியல் கற்கை நெறி வகுப்பு ஆரம்பம்

தையல், சிகையலங்காரம், சமையற்பாகம் பூவேலை, கைப்பணி ஆகியன 22 - 04 - 97 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பம்.
பாலர் பாடசாலை, கோல வகுப்பு ஆகியன நடைபெறுகின்றன. பழைய மாணவர்களுக்கும் வகுப்பு ஆரம்பம்.

(46460) **ஆதீன மேலாளர்.**

## றிக்கோ

மகிழ்ச்சியின் சுழற்சியிலே மனம் மகிழும் ஒரு நற்செய்தி

புரியாணிப் பிரியர்களே! அன்றுபோல் என்றும் சுவை மிகு கோழிப்புரியாணி இன்று முதல் தயார். கோழிப் புரியாணி என்றதும் அன்று முதல் எவர் மனதிலும் நிலைத்துவிட்ட பெயர் கொண்ட றிக்கோ மீண்டும் இன்று முதல் புரியாணிப் பிரியர்களை மனமகிழ்வுடன் அழைக்கின்றது.

கேக், சுவீற்ஸ், பட்டர் கேக், றிச்கேக், புறுட் கேக் விசேட ஓடர்கள் விசேடமாய் கவனிக்கப்படும்.

கொண்டாட்ட சுவீற்ஸ், குளிரூட்டிய குளிர்பான வகைகள் இன்னும் எத்தனையோ அத்தனைக்கும் அழைப்பது:

## றிக்கோ ஹோட்டல்

**370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(46464)

# பிறந்த நாள் வாழ்த்து

## செல்வன் சி. சிவப்பிரியன் (21 - 04 - 97)

நீர்வேலி மேற்கை சேர்ந்த சிவகரன் ஜீவகலா தம்பதியரின் செல்வப் புதல்வன் சிவப்பிரியன் **21 — 04 — 97** இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை நீர்வேலியில் உள்ள '' துவாரகை '' இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா (கொழும்பு), அம்மா, வட்டு. தெற்கில் வசிக்கும் அப்பம்மா, சித்தப்பா, பெரியப்பா, அக்கா (கனடா), மாமாமார், அத்தைமார், வைஷ் அத்தான், பெரியம்மா, மயூ அண்ணா (கொழும்பு), நீர்வேலியில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, சீலன் மாமா, இராஜவீதியில் வசிக்கும் மாமாமார், மாமிமார், மைத்துனன் தீசன், திபாகர், மைத்துனி தர்சனா, துவாரகா, சுவிசில் வசிக்கும் ஆசைமாமா, பெரியப்பாமார், பெரியம்மாமார் தங்கை சௌமியா, சிந்து அண்ணா, அபியண்ணா, கனடாவில் வசிக்கும் பாலுமாமா, அத்தை, தீபன், சகானா, கொழும்பில் உள்ள தயாசித்தி, மோகன் மாமா, மிருசுவிலில் வசிக்கும் மாமாமார், சிவலோகம் பெரியம்மா, அனைவரும் மாசிவன் மீனாட்சி அம்மன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(46444)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் இராசு கபிரியேல்

மலர்வு: **1964 — 05 — 16** உதிர்வு: **1997 — 03 — 21**

'சீவியத்தில் என்னை நேசித்தவர்களே! மரணத்திலும்என்னை மறவாதீர்கள்'

இங்ஙனம்.

**கிளின்ரன் அந்திய கால சேவை (நல்லையா டுசான்)**
**300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**தீபன்ஸ் (அ. கஜன்)**
**211, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
(சில்வர் பாத்திரங்கள் வாடகைக்கு கொடுக்கும்இடம்)

**கிப்சன் சைக்கிள் கடை (ந. கிப்சன்)**
**210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

**நண்பர்கள்:**

ந. றட்சன், ப.குட்டித்தம்பி, டானியன் சின்னமணி.

(சி/ 541)



# இன்று இரதோற்சவம் 21-04-1997

கல்வியங்காடு

## ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்

அபிஷேகம் காலை 6.00 மணி கோபுரவாசல் காலை 8.30 மணி
வசந்தமண்டபம் காலை 7.30 மணி
தேரில் சுவாமி எழுந்தருளல் காலை 9.06 மணி

**விசேட மங்கள வாத்திய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.**

மெய்யடியார்கள் அனைவரும் வருகை தந்து எம் பெருமானின் அருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

ஆலயபரிபாலனசபை

**தேரேறி வரும் ஸ்ரீ வீரபத்திரர் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக**

ந. துரைசிங்கம்
"டனிஷா கதிர்"
**ஞானபாஸ்கரோதய சங்க வீதி,**
**கல்வியங்காடு.**

நா. ஜெயகுலராசா
"யசோ பந்தல் மணவறை சேவை"
**ஞானபாஸ்கரோதய சங்க வீதி,**
**கல்வியங்காடு.**

(46451)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்



உ
விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# யாழ். வண்ணார்பண்ணை குளங்கரை மருதடி
# ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் இரதோற்சவ சிறப்பிதழ்
## (நாச்சிமார்கோயில்)
## 21 – 04 – 97



உ
## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஆசியுரை

லோகமாதாவாகிய பராசக்தியானவள் காமாக்ஷி அம்பிகையின் ரூபமாக எழுந்தருளி அருள்பாலிக்கும் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய ரதோற்சவம் இன்றாகும். அழகிய சித்திரத் தேரிலே அம்பாள் ஆரோகணித்து வீதி வலம் வருங்காட்சி கோலாகலமானது.

பிள்ளையார், முருகனுடன் அம்பாள் தேரேறி வந்து அடியார்களுக்கு அருளை அள்ளி வழங்கும் இந் நாளில் வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்.



## தேவியே! உன் அடைக்கலம்யாம்!!

சித்திரத்தேர் மீது வரும் சிங்காரக் காட்சிதனை
இத்தினமதிலே கண்டு இறும்பூதெய்துகின்றோம்
அம்மா!
பத்தரைமாற்றுப் பொன்னாய்ப் பாரிலே
பரிணமித்திடும்
முத்திக்கு வழிகாட்டும் நல்ல காமாக்ஷித் தாயே
சரணம்!

தேர்வடம் பிடித்திடுவோம் தேவியே அடக்கலம்யாம்
ஓர் இடம் தருவாயம்மா உந்தனது பாத நிழலில்
ஆர் இடம் எடுத்துரைப்போம் நீயேதான் கதியம்மா!
பாரினில் புகல் வேறில்லை பாதக்கமலம் பணிந்தோம்
தாயே!

— க. வி. இராசரத்தினம்

## கருணைமழைபொழியும் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்

அன்பே சிவம்; அன்பே சக்தி. காமாக்ஷி என்றால் அன்பையே கண்ணாக உடையவள் என்பது பொருள். அகிலாண்ட கோடி பிரும்மாண்ட நாயகியான அன்னை ஸ்ரீ காமாக்ஷி வண்ணை குளங்கரை மருதடியில் கோயில் கொண்டெழுந்தருளி வழிபடும் அடியார்களின் வல்வினைபோக்கி கருணைமழை பொழிந்து அருளாட்சி செய்கின்றாள்.

விஸ்வகர்ம குல மக்கள் தம் குலதெய்வமாக அன்னை ஸ்ரீ காமாக்ஷி தேவியை அன்புடன் வழிபட்டு வாழ்வில் சுபீட்சமும் மங்களமும் பெறுகின்றார்கள். காமாக்ஷியானவள் தன்கையில் கரும்பை வைத்துக்கொண்டு நம்முடைய பஞ்ச புலன்களையும் அடக்கி ஆள்கின்றாள். சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்று நம் ஐம்புலன்கள் அனுபவிக்கின்ற அழகுகள் எல்லாம் அவளுடையவையே. அதையுணர்த்தவே காமாக்ஷியாக திவ்ய ரூபங் கொண்டிருக்கின்றாள்.

சாம்பராகிப் போன மன்மதனும் ஸ்ரீகாமாக்ஷியின் அருளால்தான் உய்வு பெற்றான். இராஜராஜேஸ்வரியான அவளைப் பணிந்து வணங்கினால் நாம் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழலாம். அம்பாளுடைய கண்களிலிருந்து பொங்குகின்ற கடாக்ஷம் ஈடிணையற்றது. கடைக் கண்பார்வை பட்டாலே போதும். நம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சீபுரத்தில் ஓணகாந்தன் தளியில் பாடும் போது,

''வாரிருங் குழல் வாள்நெடுங்கண்
மலைமகள் மது விம்மு கொன்றைத்
தாரிரும் தடமார்பு நீங்காத்
தையலாள்; உலகுய்ய வைத்த
காரிரும் பொழில் கச்சி மூதூர்க்
காம கோட்டம் உண்டாக நீர் போய்
ஊரிடும் பிச்சை கொள்வதென்னே
ஓண காந்தன் தளியுளீரே''

என்கின்றார்.

'உலகுக்கெல்லாம் அன்னமிடும் அன்னபூரணியாக ஸ்ரீ காமாக்ஷி இருக்க நீர் ஏன் பிச்சையெடுக்கின்றீர்?' என்று சிவனைக் கேட்கின்றார். ஆகவே, காமம், குரோதம், லோபம், மோகம், மதம் மாற்சரியம் முதலான துர்க்குணங்கள் நம்மைவிட்டு விலகிப்போக அவளையே பிரார்த்திக்கவேண்டும். அவளில்லாத இடமே இல்லை. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து பரிபூரணானந்த ரூபியாகக் காட்சியளிக்



கின்றாள். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியை நாம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வழிபடவேண்டும்.

### சித்திரத் தேரில் பவனி

சித்திரத் தேரிலே சிங்காரப் பவனிவரும் கோலாகலமான காட்சி காணக் கண்கோடி வேண்டும். பக்தர்கள் புடைசூழ விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் அம்பாள் தேர் வீதி வலம்வரும் காட்சி கண் கொள்ளாக் காட்சி ஆகும்.

தாயன்பைப்போல கலப்படமே இல்லாத பூரண அன்பை உலகில் எங்குமே காணமுடியாது. 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்பது பழமொழி.

சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்.

( 6ஆம் பக்கம் பார்க்க)


### தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

அழகிய அச்சு வேலைகளை
மும்மொழிகளிலும் செய்வதற்கு
**சாந்தி அச்சகம்**
575, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**இரத்தினம் களஞ்சியம்**
காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**வைரமுத்து அன் சன்ஸ்**
காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**யாழ். உலர் சலவையகம்**
காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**லிங்கம் களஞ்சியம்**
நாச்சிமார்கோயிலடி,
காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**சிந்து மருந்தகம்**
116, காங்கேசன் துறை வீதி, சுன்னாகம்.

**குணரட்னம் குணசேகர்**
**வெல்கம் சேல்ஸ் சென்ரர்**
978, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

**தயா அச்சகம்**
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ சிவானந்தா நகையகம்**
118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கே. கே. இராசரத்தினம் நகை மாளிகை**
277, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அம்பாள் கபே**
காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயில் முன்பாக
யாழ்ப்பாணம்.

**சோபிகா நகை மாளிகை**
223, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அபிராமி புடைவையகம்**
155,156, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**ரவி மோட்டோஸ்**
245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்;

### அம்பிகையின் அருள்பெற வாழ்த்துவோர்

ருசிமிக்க உணவு வகைகளுக்கு
நீங்கள் நாட வேண்டியது
**மதுரம் உணவகம்**
1057, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

**சுமங்கலி ஜுவல்ஸ்**
112 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சோ. கனகராஜா**
**இரும்புத் தொழிலகம்**
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

**க. நாகராசா களஞ்சியம்**
காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**சிந்து மருந்தகம்**
காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**தவம் களஞ்சியம்**
1004, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

**கிருஷ்ணபிள்ளை & சன்ஸ்**
591, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ அமலா நகை மாடம்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூலக்கி**
**சிகை அலங்கரிப்பு நிலையம்**
600, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**நியூவைற் லோன்றி**
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

**அலங்கார் ஆடையகம்**
23, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**ராஜா கிறீம் ஹவுஸ்**
36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**விமலா ஸ்ரோர்ஸ்**
275, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பாடசாலைப் புத்தகங்களுக்கும்
பாட உபகரணங்களுக்கும்
சிறந்த இடம்
**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அசல் 22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் ஓடர்
செய்து பெற்றுக்கொள்ள
**ஆபி நகை மாளிகை**
[illegible], கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(விளம்பர இல. 543)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றி புனித தீர்த்தம் சித்திரா பூரணைப் பெருவிழா

**22 - 04 - 97 செவ்வாய்க்கிழமை**

✶ தீர்த்தோற்சவம்

காலை 6-45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8-00 மணி தீர்த்தவாரி

★ பிதிர்க் கடன்கள்

காலை 8-15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்த மாடவும், பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**தர்மபரிபாலனசபை, வில்லூன்றி தேவஸ்தானம்**
**பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம்.**

வில்லூன்றி,
19 - 04 - 1997 (46445)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லர் சின்னையா

**மலர்வு:** 04 — 05 — 1927 **உதிர்வு:** 02 — 05 — 1996

**திதி: 21 - 04 - 1997**

எம் குடும்பவிருட்சத்தைத் தாங்கி நின்றவிழுதே!
நல்லறிவூட்டி நின்ற கலங்கரை விளக்கே!
பாசத்தின் பெருமை சொல்லி பார் புகழ
கல்வியூட்டி, கற்றவர் மத்தியில் எம்மை
தலை நிமிர்ந்து வாழ வைத்த தெய்வமே ஐயா!
நாம் வாழும் நேரத்தில் ஓடி
நீங்கள் சென்றது எங்கே ஐயா?

நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து
ஒரு வருடம் சென்று விட்டாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதை
என்றும் வேதனைப் படுத்துகின்றது.

**பிரிவால் துயருறும்:**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (46427)

## பாராட்டு விழா

யாழ். மாவட்டத்திற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களாக திரு. செ. கு. சண்முகநாதன் (அபிவிருத்தி), திருமதி கோ. திருநாவுக்கரசு (எண் பார்வை), திரு. கா. பரநிருபசிங்கம் (பனை தென்னை வளம்) ஆகியோரும்—

திருகோணமலை மாவட்டத்திற்கு திரு. செ. கனகசபாபதி, திரு. பொ. சிவலிங்கம் ஆகியோர் பதவி உயர்வு பெற்றுச்செல்வதையும் பாராட்டுமுகமாக யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களால் இன்று பாராட்டு வைபவம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய, உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இவ் வைபவத்திற்கு சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர், மற்றும் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ- 15)

## கருணை மழை ..

(ஐந்தாம் பக்கத் தொடர்)

ஆகவே, பிள்ளைகளாகிய நாம் எமது அன்னையான ஸ்ரீ காமாக்ஷி தேவியை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். முற்றாய் நம்மை அவளிடம் ஒப்படைத்து விட்டால் எல்லாம் அவள் பார்த்துக் கொள்வாள். நஞ்சுண்ட பரமனுக்கும் சக்திதான் மருந்து. எந்த விதமான விஷத்தையும் போக்கும் மருந்தாக அம்பாள் வீற்றிருக்கின்றாள். அம்பாளின் அநுக்கிரகம் இருக்கும் வரை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. யமன் கிட்ட நெருங்கமாட்டான்.

காமாக்ஷியின் கடாட்சத்தால் தான் நாம் இப்பூவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவளின்றி ஓரணுவும் அசையாது. அவள் ஆட்டுவிக்கின்றாள்; நாம் ஆடுகின்றோம். என் செயலாவது யாதொன்றுமில்லை; இனித் தெய்வமே யாவும் உன் செயலே என்றுணரப் பெற்றுவிட்டால் அதுவே போதும். 'சக்தி இருந்தால் செய் இல்லையேல் சிவனே என்று இரு! என்று சொல்வது போல, அம்பாளின் கருணையின்றி நாம் வாழ முடியாது.

ஆகவே, அண்ட சராசரங்களுக்கும் அன்னையாக விளங்கும் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையைத் தரிசித்து இப்பூவுலகில் சதுர்வித பல புருஷார்த்தங்களையும் பெற்று ஆன்ம ஈடேற்றம் பெறுவோமாக.

''அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாமே; நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு''

## காரைநகரில் மீளக் குடியமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.21

காரைநகரில் மீளக் குடியேற விரும்புவோருக்கு பொன்னாலைப் பாதை ஊடாகச் சென்று மீளக்குடியேறுவதற்கு அனுமதி கிடைத்திருப்பதாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அங்கு சென்று குடியமர ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்களும் தாங்கள் தற்காலிகமாகத் வசித்து வரும் பகுதி செயலகங்களில் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ)

# JAFFNA COLLEGE VADDUKODDAI

## WANTED

A teacher to teach Zoology or Botany in the adv. level classes. Contact before 25th April.

The Principal.

(c/ 540)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கோண்டாவில்**
**இராமகிருஷ்ண மகாவித்தியாலய**

**ஆசிரியர் திரு. V. A. சிவராஜா (சோதிடர் வேலணை)**
பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் MERITஇல்
சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்தும்:

## ''பொன்ட்'' கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(46437)

# தென்மராட்சி மேற்கு

ப. நோ. கூ. சங்கம் கைதடி

# பதவி வெற்றிடம்

**பொது முகாமையாளர் பதவி:**

101: 9 (குறியீட்டு இலக்கம்)

சம்பளத் திட்டம்: 1105/- — 2170/-
60/- x 4 — 75/- x 11

அத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

தகைமைகள் (அ) : கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சப்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டத்துடன் அல்லது இணையான அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) : கூட்டுறவுப் பணியாளர் (உயர் தரம்) தராதரப்பத்திரம்/ க.பொ.த. (உயர்தரம்) இல் 03 பாடத்திலாவது சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

பிணைகள்: : ரொக்கப்பிணை ரூபா 5, 000/- ஆதனப்பிணை ரூபா 25, 000/- செலுத்தப்படல் வேண்டும்,

வயதெல்லை: : 10 - 05 - 97 அன்று 25 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 50 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு: : சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.
: சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்க நிர்வாகத்தினூடாக அனுப்பப்படல் வேண்டும்.
: விண்ணப்பப் பத்திரங்கள் சங்கக் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித்தராதரப் பத்திரம் அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகளை இணைத்து 10-05-1997 இல் நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கத் தக்கவாறு ''தலைவர்'' தென்மராட்சி மேற்கு ப.நோ. கூ. சங்கம், கைதடி என்ற மூகவரிக்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (விண்ணப்ப கடித உறையில் இடது மூலையில் ''பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்)

**தலைவர்**

19 - 04 - 1997. (சி/538)

## வடபகுதி பாட்டா பாதணி

சில்லறை வியாபாரிகளுக்கு ஒரு நற்செய்தி!

**வடபகுதி வியாபாரிகளின் நன்மை கருதி**

21-04-97 (திங்கட்கிழமை) காலை 10 மணியளவில்

# குதூகலத் திறப்பு விழா

# பாட்டா மொத்த விற்பனை நிலையம்

350, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

வியாபாரிகளின் கொள்வனவுக் [illegible] கழிவுகள்
கொடுக்கப்படும் (46442)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

## தாமதம் ஆகாது

மேலோட்டமாகப் பார்க்கும்போது, யாழ்ப்பாணத்தில் சுமுகநிலை ஏற்பட்டுள்ளது போலத் தோன்றினாலும், உண்மையில் நிலைமை வழமைக்குத்திரும்பவில்லை.

பெயரளவில் இல்லாவிட்டாலும் இராணுவ நிர்வாகம் நடப்பதால் மக்கள் அச்சத்துடனேயே வாழ்கிறார்கள்.

இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களது வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அமெரிக்க அகதிகள் கமிட்டி தனது அறிக்கை ஒன்றில் மேற்கண்ட விடயங்களை முன் வைத்துள்ளது; வலியுறுத்தி உள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை மற்றும் இடம்பெயர்வு குறித்து இங்கு வந்து ஆய்வுகளை நடத்திய பின்னரே, பிரஸ்தாப கமிட்டி இந்த அறிக்கையைத் தயாரித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் அந்தஅறிக்கை உண்மை நிலையை எடுத்தியம்புவதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் மீளக்குடியமர்ந்து இன்று — ஏப்ரல் 21 ஆம் திகதியுடன் — ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. சரியான கணக்கு பதின்மூன்று மாதங்கள் கழிகின்றன.

ஆனால் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலையை எய்தவில்லை. மக்கள் அச்சமின்றி வாழக் கூடிய சூழ்நிலை உருவாகவில்லை. இளைஞர் யுவதிகள் கண்டபடி கைது செய்யப்படுவது நிறுத்தப்பட்டு விட்டதாகச் சொல்வதற்கு இல்லை. தாம் நிம்மதியாக வாழலாம், பாதுகாப்புடன் வாழலாம் என்ற உணர்வு மக்களுக்கு இன்னும் தோன்றவில்லை.

வருடமும் ஒன்றாகி விட்டது ஒரு சிறிய தூரத்தைக் கடந்து செல்வதற்கு எத்தனை தடவைகள் வாகனங்களில் இருந்து இறங்கி ஏற வேண்டியுள்ளது? அடையாள அட்டையை எடுத்து நீட்ட வேண்டியுள்ளது?

இந்தப் பிரதேசத்தின், பகுதியின், ஊரின் சொந்த மக்களான, நிரந்தர வாசிகளான நாம் இவ்வாறு தொடர்ந்து இறங்கி ஏறுவவதும் அடையாள அட்டையை நீட்டுவதுமாக இருந்தால், அன்றாட வாழ்க்கையை உருப்படியாக, சுதந்திரமாக நடத்தக் கூடிய காலம் எப்போது வரும்? அதற்கு இன்னும் எத்தனை காலம் காத்திருக்க வேண்டும் என்று சலித்துக் கொள்ளும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எனவே குடாநாட்டு மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான இடை வெளியை நீட்டக்கூடாது; காலந் தாழ்த்தக் கூடாது.

அவர்கள் நிம்மதியாகவும், தொல்லைகள், தொந்தரவுகள், துன்புறுத்தல்கள் இல்லாமலும், பாதுகாப்பு உணர்வுடனும், தமக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தடைகள் தடங்கல்கள் இன்றியும் வாழும் சூழ்நிலை விரைவில் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் அமெரிக்க அகதிகளின் கமிட்டியில் அறிக்கையை அரசு கரிசனையுடன் நோக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# எம். பிக்களின் ஓய்வூதியத்தை நிறுத்தக் கோரும் பிரேரணை

## பொ. ஐ. முன்னணி உறுப்பினர் முன் அறிவித்தல்

கொழும்பு, ஏப். 20

'நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை உடன் நிறுத்த வேண்டும்' என்று கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றில் கொண்டுவர பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பெரேரா முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 வருடம் சபையில் பணியாற்றுவதன் மூலம் ஓய்வூதியம் பெற முடியும். ஆனால் அரச ஊழியர்கள் 55 வயது வரை பணியாற்றியே ஓய்வூதியம் பெற முடியும்.

இந்தப் பாரபட்சமான நிலையை நீக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நிறுத்த வேண்டும் என்று அந்தப் பிரேரணையில் தெரிவித்துள்ளார். (இ-3-150)

## முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாட்டில் தந்தை செல்வா நூற்றாண்டு விழா

கொழும்பு, ஏப். 21

தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி ஹோட்டல் தப்ரபேனில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்ச்சியில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம், முன்னாள் அமைச்சரும், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தராக விளங்கியவருமான செல்லையா இராஜதுரை ஆகியோர் உரையாற்றுவார்கள்.

அதையடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும், (இ-3-150)

## முறைசாராக் கல்விப் பிரிவின் முழு நேர ஆங்கில பாடநெறி

பருத்தித்துறை, ஏப். 21

முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் பாடசாலையை விட்டு விலகியோருக்கான முழு நேர ஆங்கிலப் பாடநெறி, யாழ். வலயம் இரண்டில், இராமநாதன் கல்லூரியிலும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் முதன் மூதலாக நடத்தப்படவுள்ளது.

இப்பாடநெறி மே 1 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடைபெறும்.

கல்வி அமைச்சினால் இறுதிப் பரீட்சை நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இப் பாட நெறியில் குறைந்த பட்சம் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து ஏதாவதொன்றில் சித்தி அடைந்திருத்தலும் வேண்டும். அல்லது ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்கள் சித்தி அடைந்திருப்பதுடன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் கல்விப் பணிப்பாளர், முறைசாராக் கல்விப் பிரிவு, இருபாலை, கோப்பாய் என்ற முகவரிக்கு சுயமாக விண்ணப்பத்தை தயார் செய்து அனுப்புமாறு யாழ். வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார். (இ-118)

## தென்மராட்சியில் மலேரியா

தென்மராட்சி, ஏப் 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் 2 ஆயிரத்து 128 பேர் மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டனர் என்றும் —

இவர்களில் 232 பேர் மூளை மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டதாகவும்— சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனவரி மாதத்தில் 24 பேரும் பெப்ரவரி மாதத்தில் 89 பேரும் மார்ச் மாதத்தில் 119 பேரும் மூளை மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டனர். (இ-117)

## திருமலையில் பயணிகளிடம் பணம் பறிக்கும் தரகர்கள்

### ஈ.பி.டி.பி. மக்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மூலம் திருகோணமலை செல்லும் மக்கள் அங்கு இடைத் தரகர்களிடம் சிக்கி ஏமாற வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர்.

யாழ். ஈ.பி.டி.பி. அமைப்பினர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பு செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது.

அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு செல்லும் பயணிகளுக்கு வாகன உதவி செய்தல், விடுதி வசதி வழங்குதல் என்ற போர்வையில் தரகர்கள் சிலர் பயணிகளை ஏமாற்றும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதனால் பொதுமக்கள் வீணாகப்பணத்தை இழப்பதுடன் பல்வேறு பிரச்சினைகளுக்கும் உள்ளாக நேரிடுகிறது.

தரகர்களிடம் சிக்கி ஏமாறாமல் பொதுமக்கள் தாமாகவே விடுதிகளில் தங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்;

மேலதிக உதவி எதுவும் தேவைப்பட்டால் திருமலையில் உள்ள ஈ. பி. டி. பி அலுவலகத்துடன் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் செல்லும் பயணிகள் கப்பலில் இருந்து இறங்கிய உடனேயே மீளத்திரும்புவதற்கான விண்ணப்பப்பத்திரத்தை அங்கு கையளித்தால் தாமதமின்றி கப்பலில் மீண்டும் இடத்தைப் பெற முடியும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ-3)

### நாளை

**சித்திரை 9**

செவ்வாய்க்கிழமை

திதி: பூரணை முன் இரவு 2. 22 வரை.

நட்சத்திரம்: சித்திரை பின் இரவு 9.27 வரை.

சித்திர குப்த விரதம்

சித்திரா பூரணை விரதம்

சுபநேரம்: 10.31- 12. 01

ராகுகாலம்: [illegible]

[illegible] பழைய நேரப்படி)

## மே தினத்தில் புலிகள் தாக்கலாம்

கொழும்பு, ஏப். 21

மேதினத்தன்று விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் - வவுனியா பாதையில் உள்ள காவலரண்களில் —

அல்லது வெலிஓயா, மட்டக்களப்பு, திருகோணமலை பகுதிகளில் — விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை மேதினத்தில் நடத்தலாம் எனத்தகவல் கிடைத்துள்ளதாகவும் —

இதையடுத்து படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும்—பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (இ-3-150)

## கிணறுகளை புனரமைக்க உதவி

அராலி, ஏப். 20

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் குடிதண்ணீர்க்கிணறுகளை புனரமைக்கவும் புதிதாகக் கிணறுகளை அமைக்கவும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் உதவ உள்ளது.

## பெயர்ப்பலகை

அராலி, ஏப். 21

வலிகாமம்மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தில் கடமை புரியும் 25 கிராம உத்தியோகத்தர்களுக்கும் அலுவலக பெயர்ப் பலகைகளை பிரதேச செயலகம் புதிதாக வழங்கியுள்ளது. (இ-12)

## வால் நட்சத்திரம் ஒன்று பூமியுடன்மோதினால்...

நியூயோர்க், ஏப். 20

ஒரு கிலோ மீற்றர் நீளமுள்ள வால் நட்சத்திரம் ஒன்று பூமியுடன் வந்து மோதினால் அதன் விளைவு எப்படியிருக்கும்?

ஹீரோசிமா, நாகசாக்கி ஆகிய நகரங்களில் 2 ஆம் உலக யுத்தத்தின்போது அமெரிக்காவால் வீசப்பட்ட அணுகுண்டுகளால் ஏற்பட்ட விளைவுகளைப் போல 150 இலட்சம் மடங்கு சேதங்கள் அதனால் ஏற்படும் என அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வு ஒன்றின் மூலம் முடிவு செய்துள்ளனர்.

இவ்வாறு ஒரு சம்பவம் நடக்குமானால் கடல் அலைகள் 420 மீற்றர் உயரம் வரை ஆவேசத்தோடு எழுந்து பூமியின் பெரும்பகுதிகளை அள்ளிச் சென்று விடும்.

1994 ஆம் ஆண்டு சூமேக்கர் லெவி என்ற வால் நட்சத்திரம் வியாழக் கிரகத்தோடு மோதியது. அப்படி ஒரு வால் நட்சத்திரம் பூமியோடு மோதுவது மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழலாம்.

650 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பூமியோடு ஒரு வால் நட்சத்திரம் வந்து மோதியது. அதன் விளைவாகத்தான் பூமியின் பெரும் பகுதி கடல் கொள்ளப்பட்டது.

டைனோசர் போன்ற பலவகை மிருகங்களின் அழிவுக்கும் அதுவே காரணமாக அமைந்திருக்கலாம் என்றும் அந்த விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

### மீனா தீ அனர்த்தம்:

## 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனரா?

ரியாட், ஏப். 21

சவுதி அரேபியாவின் மீனா சமவெளிப் பகுதியில் கடந்த செவ்வாயன்று நிகழ்ந்த பெரும் தீ அனர்த்ததில் உயிரிழந்து விட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகம் என்று சந்தேகிக்கப்படுவதாக சவுதி அரேபிய எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அரச அமைச்சகங்கள், தொடர்புசாதன நிலையங்கள் மூலம் இந்த எண்ணிக்கை உறுதிப்படுத்தப் பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

343 பேர் மட்டுமே இத்தீ விபத்தில் மாண்டனர் என்று உத்தியோக பூர்வ அறிவிப்புகள் ஏற்கனவே தெரிவித்துள்ள போதும் இந்திய ஹஜ் பயணிகளில் இன்னும் சுமார் 400 பேர் காணாமற் போயுள்ளனர்.

புனிதஹஜ் யாத்திரிகர்கள் அரபாத் மலைக்கான யாத்திரையை முடித்துக் கொண்டு தத்தமது முகாம்களுக்குத் திரும்பி விட்ட நிலையில் இந்த காணாமற் போனோர் பற்றிய விவரங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. (ஐ)

## அமெரிக்காவில் வெள்ளப் பெருக்கு

வாஷிங்டன், ஏப்.21

அமெரிக்காவின் வடக்கு டகோட்டா நகரான கிளன் பொக்ஸில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது.

கடந்த 500 ஆண்டு காலச் சரித்திரத்தில் முதல் முறையாக ஏற்பட்டிருக்கும் இந்த வெள்ளப் பெருக்கினால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து விட்டனர்.

சுமார் 8 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். நகரின் மொத்த சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் அவசரகால முகாம்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடத்தும் யோசனைக்கு எம். பிக்கள் பலர் ஆதரவு இல்லை

கொழும்பு, ஏப். 21

திடீர்த் தேர்தல் ஒன்றை நடத்துவது என்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் யோசனையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஐ. தே. க. ஆகியவற்றின் எம். பிக்கள் பலர் எதிர்ப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தற்சமயம் உள்ள நிலை தேர்தலுக்கு உகந்ததல்ல என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம். பிக்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ. தே. கவின் பெரும்பாலான எம். பிக்களும் இதே கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இருதரப்பில்உள்ளவர்களில் பெரும் பான்மையானவர்கள் பொதுத் தேர்தல் யோசனையை எதிர்ப்பதால், தேர்தல் நடக்கும் சாத்தியம் குறைவு என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இதேநேரம் — மாகாண சபைத் தேர்தல்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தயாராகி வருவதாகவும்—

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ள இரு குழுக்கள் எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களுக்கு செல்லவுள்ளன எனவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## பிரிட்டிஷ், நெதர்லாந்து குழுக்கள் வெள்ளியன்று யாழ். வருகின்றன

கொழும்பு, ஏப். 21

யாழ். மாவட்டத்தில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள புனரமைப்புப் பணிகளை நேரில் பார்வையிட பிரிட்டிஷ், நெதர்லாந்து தூதுக்குழுவினர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் காணாமற் போயுள்ளவர்களின் விவரங்களையும் இவர்கள் கேட்டறிந்து கொள்வார்கள்.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் தலைமையிலான குழுவும், நெதர்லாந்து தூதரக உயர் அதிகாரிகள் குழுவுமே யாழ்ப்பாணம் வருகின்றன.

பிரிட்டிஷ் தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ். ஆயர், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோருடன் கலந்துரையாடவிருக்கின்றனர்.

மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம் வழங்க தமது அரசாங்கம் வழங்கிய 5 ஜெனரேட்டர் இணைப்பு வேலைகளையும் அவர்கள் பார்வையிடுவர்.

அடுத்த மாதங்களில் யாழ்ப்பாணத்தில் மாம்பழ சீசன் ஆரம்பிப்பதால், பழச்சாறு தயாரிக்கும் தொழில் முயற்சியை மேற்கொள்ள பிரிட்டன் உதவ முன்வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதே வேளை — உருளைக் கிழங்கு செய்கை, நகரப்பகுதிகளில் கால்வாய்களைத் திருத்துதல், யாழ். போதனா வைத்திய சாலையைத் திருத்துதல், புத்தூர் மெதடிஸ்த தேவாலயத்தை திருத்துதல் போன்ற பணிகளில் நெதர்லாந்து ஈடுபட விருககிறது. (இ-3-150)

### பருத்தித்துறை பிரதான வீதியில்

## லொறிகள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்துக்கு இடைஞ்சல்

பருத்தித்துறை பிரதான வீதியில் ஓராங்கட்டைச் சந்திக்கருகாமையில் போக்குவரத்து நெருக்கடி அதிகரித்து வருகிறது.

இவ்விடத்தில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை இறங்கு துறைக்கு வரும் சகல லொறிகளும் இவ் வீதியின் இரு மருங்கிலும் இரவு பகலாக நிறுத்தப்பட்டுள்ளன.

பூங்காவினுள்ளும் லொறிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை ஆரம்பமாகும் நேரங்களில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட இந்த லொறிகள் காரணமாக இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-118)

## புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு மின்சாரம்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமான மட்டக்களப்பு மண்முனை தென். மேற்கு பிரதேசத்துக்கான மின்சார விநியோகம் நேற்று முதன் முறையாக ஆரம்பித்து வைக்கப் படவிருந்தது.

தபால்,தொலைத்தொடர்புகள் பிரதி அமைச்சர் எம்.எல். எம். ஹிஸ்புல்லாவின் நிதி ஒதுக்கீட்டில் இம் மின்சார விநியோகம் நடைபெறுகிறது.

மகிழடித்தீவு அரசினர் வைத்தியசாலை மண்டபத்தில் பிரதேசசபைத் தலைவர் அகிலேஸ்வரன் தலைமையில் இவ் வைபவம் நடைபெறவிருந்தது.

கடந்த பல ஆண்டுகளாக மட்டக்களப்பு மண்முனைத் தெற்குப் பிரதேச மக்கள் மின்சாரம் அற்ற நிலையில் வாழ்ந்தனர். (இ-3)

## படையினர் தமது நிலைகளுக்கு மீண்டும் திரும்பி வந்தனர்

பருத்தித்துறை, ஏப். 21

வடமராட்சி கிழக்கு நோக்கிப் பெரும் எடுப்பில் சென்ற படையினர் கடந்த சனிக்கிழமை தமது நிலைகளுக்குத் திரும்பினர்.

ஏராளமான வாகனங்களிலும் —

லொறிகள், கனரக வாகனங்கள், பீரங்கி பூட்டிய வாகனங்கள் மூலமும் — சுமார் 15 கிலோமீற்றர் தூரம் படையினர் முன்னேறிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இப்படி முன்னேறிச்சென்ற சமயமே படையினரின் வாகனம் ஒன்று புலிகளின் கண்ணிவெடியில் சிக்கியது.

இந்த கண்ணிவெடித் தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட 10 படையினர் மரணமானது தெரிந்ததே.

படையினர் கடந்த சனியன்று மீண்டும் வல்லிபுரம் முகாம் திரும்பினர். (இ-118)

### குஜ்ரால்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரிடம் பேசிய முன்னணியின் அமைப்பாளர் என். சந்திரபாபு நாயுடு. கடித விடயத்தை பரிசீலிப்பதாக குடியரசுத் தலைவர் தெரிவித்தார் என்று கூறி இருந்தார்.

மத்தியில் ஐக்கிய முன்னணியின் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு பிரதமர் தலைமையில் 10 உறுப்பினர் ஒருங்கிணைப்புக் குழுவை அமைக்க ஐக்கிய முன்னணியும், காங்கிரஸ் கட்சியும் நேற்று ஒப்புக்கொண்டன.

சீதாராம் கேசரியும், சந்திரபாபு நாயுடுவும் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மாவைச் சந்தித்து புதிய ஐக்கிய முன்னணியின் செயற்பாடுகளில் இருதரப்பினரிடையேயும் நல்ல ஒருங்கிணைப்பு இருக்கும் எனத் தெரிவித்தனர்.

ஐக்கிய முன்னணியுடன் நல்ல முறையில் இணைந்து பணியாற்றுவதற்கான செயல் முறை ஒன்றை உருவாக்குவது குறித்து காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி தமது கட்சித் தலைவர்களுடன் ஆலோசனைகளை நடத்தி வருகிறார். (இ-3)

### மூப்பனாரை...

(முதலாம் பக்கத் தொடர்)

பெருமூச்சு விடுவதாக பாரதீய ஜனதாக் கட்சி நாடாளுமன்றத் தலைவர் வாஜ்பாய் தெரிவித்தார்.

''கடைசியில் மத்தியில் ஓர் அரசு அமையவிருக்கிறது'' என்றார் அவர்.

தேவகௌடா அரசை விட புதிய அரசு அதிக நாள்நீடிக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஐக்கிய முன்னணி அரசில் சேர்வதில்லை என்ற தமிழ் மாநிலக் காங்கிரஸின் முடிவால் ஐக்கிய முன்னணி மேலும் பலவீனமடைகிறது என்றும்—

குஜ்ரால் தலைமையிலான அரசு நீண்டகாலம் நிலைக்காது என்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும்— பாரதீய ஜனதாக் கட்சியின் அகில இந்திய துணைத் தலைவர் செ. ராஜகோபால் தெரிவித்தார். (இ-3)

### அரசு-...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைக் கூட்டணி முஸ்லிம் காங்கிரஸுடன் இணக்கம் ஒன்றுக்கு வந்த பின்னர் அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்கும் இரு கட்சிகளும் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்.

முஸ்லிம் காங்கிரஸும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏற்கனவே பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளன விரைவில் மீண்டும் சந்தித்து இருகட்சிகளும் பேசவுள்ளன.

வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து இரு கட்சிகளும் ஒரு நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. இதில் சந்தேகம் இல்லை —

இப்படி அவர் மேலும் கூறினார்.

பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸின் முயற்சியால் ஜனாதிபதி சந்திரிகாவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக உடன்பாடு ஒன்றில் கையொப்பமிட்டது தெரிந்ததே. (இ-3)

## அரியாலை கிழக்கில் மக்கள் மீளக்குடியேற அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 21

அரியாலை கிழக்குப் பகுதியில் மக்கள் மீளக் குடியேறவும், விவசாயம் செய்யவும் அனுமதிப்பதென பலாலியில் நடந்த மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பலாலியில் யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கருணாதிலகா தலைமையில் நடந்த மாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

அரியாலை கிழக்குப் பகுதியில் தற்சமயம் உள்ள பாதுகாப்பு அரணை மணியந்தோட்டம் வரை விஸ்தரித்து, அப்பகுதியில் மக்கள் குடியேறவும், தமது வயற் காணிகளில் அவர்கள் விவசாயம் செய்யவும் அனுமதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்கில் ஒரு குறிப்பிட்ட தூரம் வரை மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப் பட்டுள்ளது தெரிந்ததே.

## சிவராத்திரி - ஹஜ் தினங்களை விடுமுறை தினங்களாக்குக

### ஜனாதிபதியிடம் அஷ்ரப் கோரிக்கை

கொழும்பு, ஏப். 21

சிவராத்திரி தினத்தையும், ஹஜ் பெருநாள் தினத்தையும் அடுத்த வருடத்தில் இருந்து விடுமுறையாகப் பிரகடனம் செய்யுமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஜனாதிபதியை கேட்டுள்ளார்.

இந்த இருதினங்களையும் விடுமுறை தினங்களாகப் பிரகடனம் செய்து, அந்த நாள்களை ஈடு செய்யும் வகையில், அடுத்து வரும் சனிக்கிழமையை வேலை நாளாகப் பிரகடனம் செய்யுமாறும் அவர் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

சிவராத்திரி, ஹஜ் பெருநாள் ஆகிய தினங்களில் பொது விடுமுறை வழங்க வேண்டும் என்று பல பொது அமைப்புக்கள் கோரிவருகின்றன.

சிவராத்திரியன்று இந்துக்களுக்கும் —

ஹஜ் பெருநாளன்று முஸ்லிம்களுக்கும் — தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (இ-3-150)

## பொங்கல் விழா

ஏழாலை பெரியதம்பிரான் வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் புதன் கிழமை இரவு ஆரம்பமாகி வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் விசேட பூசை, தீக்குளிப்புடன் பூர்த்தி அடையும். (இ)

### மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்)

துக்குட்பட்ட சிறுவர்களுக்கான நூறு மீற்றர், மெதுவான சைக்கிளோட்டம், யானைக்குக் கண் வைத்தல், தடை ஓட்டம், தேசிக்காய் தாங்கி ஓடுதல், சிறுவருக்கான பணிஸ் உண்ணும் போட்டி, விநோத உடைப் போட்டி, மாதன், மறைந்திருப்பவரைக் கண்டுபிடித்தல், பலூன் உடைத்தல், கயிறிழுத்தல்,முட்டி உடைத்தல் ஆகியவை இந்த விழாவில் இடம்பெறும் முக்கிய நிகழ்ச்சிகளாகும். பொதுமக்கள் கட்டுப்பாடு ஏதுமின்றி இந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றலாம்.

வெற்றியீட்டுவோருக்கு பெறுமதியான வெகுமதிகள் வழங்கப்படும்.

கட்டணம் எதுவுமின்றி லொட்டறிச் சீட்டுக்களை விழா மைதானத்தில் பொதுமக்கள் வாங்கி அந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். இப்போட்டியில் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படும் முதல் ஐவருக்கு லுமாலா சைக்கிள்கள் வழங்கப்படும். அடுத்த இருபத்தி ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு எவ். எம். அலைவரிசை கொண்ட வானொலிப் பெட்டிகள் பரிசளிக்கப்படும்.

அழகுராணிப் போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு தங்கச் சங்கிலிகள் பரிசளிக்கப்படும்.

இந்த விழாவுக்கான பிரதான ஆதரவு உதவியை இலங்கை வங்கி அளித்துள்ளது. மக்கள் வங்கியும் ஆதரவு வழங்குகின்றது யாழ். வணிகர் கழகமும் உதவி வழங்க முன்வந்துள்ளது.

— இவ்வாறு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கத்தோலிக்க இந்து இளைஞர் சிரமதானம்

கரவெட்டி அந்திரான் முருகன் ஆலய புனரமைப்புப் பணிக்கான சிரமதானத்தில், கரவெட்டி வடக்கு இந்து இளைஞர்களுடன் கரவெட்டி கத்தோலிக்க இளைஞர் ஒன்றியமும் இணைந்து ஈடுபட்டு வருகின்றது.

அதேபோன்று உயிர்த்த (ஈஸ்டர்) விழாவை முன்னிட்டு கரவெட்டி கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் நடத்திய ''முள் மலர்ந்தது'' என்ற நாடகத்தில் கரவெட்டி வடக்கு இந்து இளைஞர்களும் பங்குபற்றி நடித்தனர்

## பிரதி பொலீஸ்மா அதிபர்கள்

கொழும்பு, ஏப். 21

பொலீஸ் சேவையில் புதிதாக மூன்று பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

பிரதிப் பொலீஸ்மா அதிபர்களாகப் பணியாற்றி வந்த கனகரத்தினம், கபூர், குக்மன் சில்வா ஆகியோர் ஓய்வு பெற்றதையடுத்தே புதியவர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

இந்த நியமனத்துக்காக 10 சிரேஷ்ட பொலீஸ் அதிபர்களின் பெயர்களை பொலீஸ்மா அதிபர் பாதுகாப்பு அமைச்சுக்கு சிபார்சு செய்துள்ளார். (இ-3-150)

### தீக்குளிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

தற்பொழுது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மூப்பனார் அதிர்ச்சியும், வருத்தமும் தெரிவித்துள்ளார்.

''மூப்பனார் என்றுமே பதவியை விரும்பியதில்லை. எனவே தொண்டர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடக்கூடாது'' என்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் கேட்டுள்ளது. (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 296 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org